# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **03.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)

## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 18044/SCIC/2023</u>**

திரு. ஆ.ஐசக் அருள் த/பெ.ஆபிரகாம் மேல்முறையீட்டாளர்
கதவிலக்கம் 1/159, ரூபஸ் மருத்துவமனை சமீபம்
தென்தாமரை குளம் அஞ்சல்
கன்னியாகுமரி - 629 701.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் “U” பிரிவு
பதிவுத்துறைத் துறைத் தலைவர் அலுவலகம் ……. பொதுஅதிகார அமைப்பு
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 12.07.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 20.07.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 12.08.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 26.09.2023 |
| 5 | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 14.10.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 26.09.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 28.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கடந்த 28.02.2022-ல் எனது மேல்முறையீட்டு மனுவிற்கு திருநெல்வேலி மண்டல பதிவுத்துறைத் துணைத் தலைவர் அவர்களின் நடவடிக்கை ந.க.எண்.1311/தபி/2022, நாள் 26/09/2022-ல் மேல்முறையீடு மனு ஏதேனும் தங்கள் அலுவலகத்தில் பெறப்படின் அதன் நகல் தரவும்” என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. மனுதாரரின் சார்பில் வழக்கறிஞர் ஒருவர் விசாரணையில் பங்கேற்க வந்திருந்தார். தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் மேல்முறையீட்டு விதிமுறைகளின்படி அவ்வழக்கறிஞர் அனுமதிக்கப்படவில்லை. ஏற்கெனவே, இதே மனுதாரரின் வழக்கு எண்.SA 17593/SCIC/2023, 03/04/2025 அன்று காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற போது, இதேபோன்று, அவரது சார்பில் வழக்கறிஞர் ஒருவரை பங்கேற்க அனுப்பியிருந்தார். அன்றைய தினமும், அவ்வழக்கறிஞரையும் பங்கேற்க அனுமதிக்கவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி G.புஷ்பலதா, “U” பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கெனவே 20/07/2023, 26/09/2023 மற்றும் 26/09/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதாகவும் மீண்டும் சமீபத்தில் 27/05/2025 தேதியிட்டு இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, அக்கடிதம் மனுதாரரைச் சென்றடைந்ததற்கான அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ.ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 18044/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் “U” பிரிவு
பதிவுத்துறைத் துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

**மேல்முறையீட்டாளர்**

திரு. ஆ.ஐசக் அருள் த/பெ.ஆபிரகாம்
கதவிலக்கம் 1/159, ரூபஸ் மருத்துவமனை சமீபம்
தென்தாமரை குளம் அஞ்சல்
கன்னியாகுமரி - 629 701.

RG/PC